

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (27.9.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கு. செல்வப்பெருந்தகை, காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வி சுதா, செல்வி ஜோதிமணி, ராபர்ட் புரூஸ், விஜய் வசந்த், கோபிநாத், விஷ்ணுபிரசாத் ஆகியோர் சந்தித்து பேசினார்கள். உடன் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் உள்ளார்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (27.9.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், திருநெல்வேலி மேற்கு மாவட்டப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள இரா. ஆவுடையப்பன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் கழக பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன், கழக பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர். பாலு எம்.பி., கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என். நேரு, அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர். ராமச்சந்திரன், கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, செய்தி தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (27.9.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், திருநெல்வேலி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள ம. கிரகாம்பெல் சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் கழக பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன், கழக பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர். பாலு எம்.பி., கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என். நேரு, அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.09.2025) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் வேளாண் வணிகத் திருவிழா 2025 தொடங்கி வைத்து, வேளாண்மைஉழவர் நலத்துறை சார்பில் உழவர் சந்தை, ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், வேளாண் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள், முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள், வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டும் இயந்திரங்கள் என பல்வேறு அமைப்புகளை காட்சிப்படுத்தி அமைக்கப்பட்டுள்ள கண் காட்சி அரங்குகளை பார்வையிட்டார். உடன் அமைச்சர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.9.2025) சென்னை, தரமணி, எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற பேராசிரியர் எம்.எஸ்.சுவாமிநாதன் நூற்றாண்டு நினைவஞ்சலி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, எம்.எஸ்.சுவாமிநாதன் மற்றும் மீனா சுவாமிநாதன் ஆகியோரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, உரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள், எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் டாக்டர் சௌமியா சுவாமிநாதன், தலைமை அஞ்சல் துறைத் தலைவர் திருமதி மரியம்மா தாமஸ், 'தி இந்து' குழுமத்தின் இயக்குநர் என்.ராம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# வேளாண் வணிகத் திருவிழா! முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

## முதல் பக்கத் தொடர்ச்சி

இதனால், கடந்த நான்கு ஆண்டுகளில், பத்தாயிரத்து 187 கிராம ஊராட்சிகளில், 52 இலட்சம் பேர் பயனடைந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, நான் பெருமையோடு சொல்கிறேன் 47 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்களை மீண்டும் சாகுபடிக்கு கொண்டு வந்திருக்கிறோம்!

அடுத்து, மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தில், இதுவரைக்கும் 20 இலட்சம் விவசாயிகள் பயனடைந்திருக்கி றார்கள். கடந்த நான்கு ஆண்டுகளில், தமிழ் நாட்டில் அதிகபட்சமாக 130 இலட்சம் மெட் ரிக் டன் வேளாண் விளைபொருட்கள், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பரி வர்த்தனை செய்யப்பட்டிருக்கிறது.

**நெல்லுக்கு ஊக்கத் தொகை உயர்வு!**

விவசாயிகளின் பொருளீட்டுக் கடனை 3 இலட்சம் ரூபாயில் இருந்து 5 இலட்சம் ரூபா யாக உயர்த்தியிருக்கிறோம். இன்னும் நாம் செய்திருக்கக்கூடிய சாதனைகள் இருக்கி றது.

சுருக்கமாக சொல்ல வேண்டும் என்று சொன்னால்

★ டெல்டா மாவட்டங்களில், 1 இலட்சத்து 45 ஆயிரம் மெட்ரிக் டன் பருத்தி விற்பனை

★ தென்காசி மாவட்டம் ஆலங்குளத் தில், 5.17 கோடி ரூபாய் மதிப்பில், புதிய ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்

★ ஈரோடு மாவட்டத்தில், மஞ்சள் ஏற்று மதி மையம்

★ 324 கிடங்குகளுக்கு கிடங்கு மேலாண்மை ஒழுங்குமுறை ஆணையத் தின் ஒப்புதல் பெறப்பட்டு, ஒன்றிய அரசின் அங்கீகாரமும், பாராட்டும் பெறப்பட்டிருக்கிறது.

★ தமிழ்நாடு முழுவதும் வர்த்தகம் மேற்கொள்ள 8,366 வணிகர்களுக்கும் 745 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங் களுக்கும் ஒன்றுபட்ட ஒற்றை உரிமம்.

★ 285 கோடி ரூபாயில் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் கட்டமைப்பு வசதி கள்

★ 14 புதிய உழவர் சந்தைகள்

★ ஏற்கனவே இருந்த 125 உழவர் சந் தைகளில் புனரமைப்பு பணிகள்

★ மாநகராட்சிப் பகுதிகளில் 30 நடமா டும் காய்கனி அங்காடிகள்

★ நீலகிரியில், சிறுதானியங்கள் பதப்ப டுத்தும் நிலையம்!

★ எடப்பள்ளியில், ஒருங்கிணைந்த கிராம வேளாண் சந்தை வளாகம்

★ கொல்லிமலையில், மிளகு பதப்படுத் தும் மையம்,

★ தஞ்சாவூர் மாவட்டத்தில், தென்னை மதிப்புக் கூட்டு மையம்.

★ பண்ருட்டி மற்றும் ஒட்டன்சத்திரத் தில், குளிர்பதனக் கிடங்குகள்,

★ களக்காட்டில், வாழை ஏல மையம்

★ திருவண்ணாமலை மாவட்டம், தெள் ளானந்தல் பகுதியில், சமையல் எண்ணெய்க் கான சந்தை ஊக்குவிக்கும் மையம் மற்றும் 14 ஆலோசனை மையங்கள்

★ உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் வணிகம் செய்வதற்கு 73 கோடி ரூபாய் நிதியுதவி

**கூடுதல் நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பு!**

★ மாநகராட்சிகளில், 50 சிறப்பு அங்காடிகள்

★ உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் புதிதாக தொழில் தொடங்குவதற்கு 53 கோடி ரூபாய் மானியம்

★ 8 ஆயிரத்து 355 விவசாயிகள் மற் றும்வேளாண்தொழில்முனைவோர்களுக்கு பல்வேறு வேளாண் உட்கட்டமைப்பு வசதி களுக்காக 2 ஆயிரத்து 911 கோடி ரூபாய் கடனுதவி விலை வீழ்ச்சிக் காலங்களில், விவசாயிகளைப் பாதுகாக்க இதுவரை 11 ஆயிரத்து 197 மெட்ரிக் டன் பச்சைப்பயறு, ஆயிரத்து 6 மெட்ரிக் டன் உளுந்து, 33 மெட் ரிக் டன் துவரை, 1,467 இலட்சம் மெட்ரிக் டன் கொப்பரை ஆகியவை குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல்

★ திருநெல்வேலி மாவட்டம், கங்கை கொண்டானில் மெகா உணவுப் பூங்கா

★ கடலூர், கிருஷ்ணகிரி, சேலம், திரு வண்ணாமலை, திண்டுக்கல், தேனி, மது ரையில் சிறிய உணவுப் பூங்கா

★ மாநிலத்தின் தனித்துவமான 40 விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற விண்ணப்பிக்கப்பட்டு இதுவரை, சோழவந்தான் வெற்றிலை, பண்ருட்டி பலா, புளியங்குடி எலுமிச்சை, விருதுநகர் சம்பா வத்தல் உள்ளிட்ட 7 விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு! மீதம் 33 பொருட்களுக்கும் விரைவில் பெற நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

★ முந்திரித் தொழிலில் ஈடுபட்டிருக் கின்ற தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்க "தமிழ்நாடு முந்திரி வாரியம் என் னும் தனி அமைப்பு!

★ கடந்த நான்கு ஆண்டுகளில், இயற்கை இடர்பாடுகளால் ஏற்பட்ட பயிர் சேதங்களுக்கு நிவாரணமாக 21 இலட்சம் விவசாயிகளுக்கு ஆயிரத்து 630 கோடி ரூபாய்!

★ பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தில், 32 இலட்சம் விவசாயிகளுக்கு 5 ஆயிரத்து 720 கோடி ரூபாய் இழப்பீட்டு தொகை!

★ கூடுதல் நெல் கொள்முதல் நிலையங் கள் திறப்பு!

★ நெல்லுக்கு வழங்கப்பட்ட மாநில அர சின் ஊக்கத்தொகையும் உயர்த்தப்பட்டி ருக்கிறது!

★ 2025–26 ஆம் ஆண்டுக்கு, ஒன்றிய அரசு நெல்லுக்கு அறிவித்த குறைந்தபட்ச ஆதரவு விலை விவசாயிகளுக்குப் போது மானதாக இல்லாத காரணத்தால், தமிழ் நாடு அரசு குவிண்டாலுக்கு குறைந்தபட்சம் 2,500 ரூபாய் விவசாயிகள் பெறும் வகை யில் சாதாரண இரகத்துக்கு 131 ரூபாயும், சன்ன இரகத்துக்கு 156 ரூபாயும் உயர்த்தி வழங்கியிருக்கிறது.

★ கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன் றுக்கு 349 ரூபாய் சிறப்பு ஊக்கத்தொகை யாக அறிவிக்கப்பட்டு 297 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தமிழ்நாட்டில் கரும்பு விலை மெட்ரிக் டன்னுக்கு 3 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப் படுகிறது.

★ வேளாண் பணிகள் எவ்விதத் தொய் வுமில்லாமல் நடைபெற, வேளாண்மையில் இயந்திரமயமாக்கல் திட்டம்.

★ விவசாயிகள் வேளாண் இயந்திரங் கள் வாங்கிடவும், இயந்திர வாடகை மையங் களை நிறுவுவதற்கும் 70 ஆயிரம் விவசாயி களுக்கு 577 கோடி ரூபாய் மானியம்!

★ வேளாண் இயந்திரங்களை, தேவைக்கேற்ப குறித்த நாளில் வாடகைக் குப் பெற உழவர் செயலியில், இவாடகை சேவை உருவாக்கப்பட்டு இரண்டரை லட்சம் முன்பதிவுகள் விவசாயிகளால் மேற்கொள் ளப்பட்டிருக்கிறது. இதுவரை 1 இலட்சத்து 75 ஆயிரம் விவசாயிகள் பயன்பெற்ற தனை தொடர்ந்து இன்னும் பலர் பயன் பெற்று வருகிறார்கள்.

★ தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டி னம், மயிலாடுதுறை, கடலூர், திருச்சி மற் றும் அரியலூர் ஆகிய 7 மாவட்டங்களை உள்ளடக்கிய காவிரி, வெண்ணாறு, வெள் ளாறு வடிநிலப் பகுதிகளிலும், கல்லணை கால்வாய்ப் பாசனப் பகுதிகளிலும், இது வரை 29 கோடியே 48 இலட்சம் ரூபாய் செலவில், 8 ஆயிரத்து 370 கிலோ மீட்டர் நீளத்துக்கு, C மற்றும் D பிரிவு கால்வாய்க ளில் தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டு, கடைமடைக்கும் பாசன நீர் செல்வது உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

★ வேளாண்மைக் கல்வியை மேம்படுத் தும் வகையில், நாகப்பட்டினம், சிவகங்கை, கரூர் ஆகிய மாவட்டங்களில், மூன்று புதிய அரசு வேளாண்மைக் கல்லூரிகள்.

இந்த சாதனைகளின் தொடர்ச்சியாக இந்த வேளாண் வணிகத் திருவிழா சிறப் பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டி ருக்கிறது.

**புதிய ஏற்றுமதியாளர்களை உருவாக்குவோம்!**

விவசாயிகளைத் தொழில் முனைவோர் களாக மாற்றி புதிய ஏற்றுமதியாளர்களாக அவர்களை உருவாக்குவோம். அதற்காகத் தான் இந்த நிகழ்ச்சி. இதை உழவர் பெரு மக்கள் எல்லோரும் முழுமையாக பயன்ப டுத்திக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வேளாண் வணிகத் திருவிழா, விவசாயிகள், கல்லூரி மாணவர்கள், உணவு பதப்படுத்துபவர்கள், வேளாண் ஏற் றுமதியாளர்கள் மற்றும் பொதுமக்கள் எல் லோருக்கும் மிகவும் பயனுள்ளதாக நிச்சய மாக இருக்கும். உழவுத் தொழிலுக்கும், வேளாண் தொடர்புடைய அனைத்துத் தரப் பினருக்கும், நாம் அனைவரும் ஒன்றி ணைந்து ஊக்கமளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வேளாண் வணிகத் திருவிழாவை சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கக்கூடிய வேளாண்மை உழவர் நலத்துறைக்கு மீண் டும் என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த் துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# எம்.எஸ்.சுவாமிநாதன் நூற்றாண்டு நினைவஞ்சலி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை! முதல் பக்கத் தொடர்ச்சி

பூர்த்தி அடையவில்லை. பசியால் பலர் இறந்தார்கள்! அந்த நிலைமையெல்லாம், இன்றைக்கு மாறியிருக்கிறது என்றால், அதற்கு, எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள் முன்னெடுத்த "பசுமைப் புரட்சிதான் முக்கிய காரணம்!

அதுமட்டுமல்ல, இந்த வளர்ச்சியுடன் வந்த விளைவுகளைப் பற்றியும், ஒரு அறிவியலாளராக எடுத்துச் சொல்லி அவர் கவலைப்பட்டார். கெமிக்கல் உரங்களின் நச்சுத்தன்மையால் நிலம் எப்படிப் பாழாகிறது என்றெல்லாம் தெளிவாக எடுத்துச் சொல்லி, "வயிறு நிரம்பினால் மட்டும் போதாது, நாம் வழங்குகின்ற உணவு சத்தானதாவும், நிலையானதாகவும் இருக்கவேண்டும் என்று சொன்னார்.

**ஆற்றலுள்ள பயிர்களை கண்டறியப் பாடுபடுவீர்!**

இங்கே பல அறிவியலாளர்களும், அவருடைய ஆராய்ச்சி அறக்கட்டளையைச் சேர்ந்தவர்களும் இருக்கிறீர்கள். அவரு டைய கனவுகளை நனவாக்குகின்ற பணிகளில் நீங்கள் தொடர்ந்து ஈடுபட வேண்டும். சத்தான, அதேசமயம் பெரும் மக்கள் தொகையின் தேவையைத் தீர்க்கும் ஆற்றலுள்ள பயிர்களைக் கண்டறிய நீங்கள் எல்லாம் பாடுபடவேண்டும்!

வேளாண்மைக்கான நவீனக் கருவி களை குறைந்த விலையில் உழவர்களிடம் கொண்டு சேர்க்கின்ற பணியையும் நாம் செய்தாக வேண்டும்! இதற்கெல்லாம் அடித்தளமாகத்தான், நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், வேளாண்மைக்கு என்று தனி நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து கொண்டு வருகிறோம். அதுவும், இந்த ஆண்டு வேளாண்மை பட்ஜெட்டில், வேளாண்மையில், புதிய கண்டுபிடிப்பு களுக்கான "டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிதி உருவாக்கப்படும் என்று அறிவித்து, அதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறோம் என்பது குறிப்பிடத்தக்கது!

**உழவர்களின் உணர்வுப்பூர்வமான உறவைப் பேணி வருகிறோம்!**

எப்படி சுவாமிநாதன் அவர்கள், உழவர்களின் உரிமைக்காகவும், நன்மைக் காகவும், நலனுக்காகவும் செயல்பட்டாரோ, அப்படித்தான் நம்முடைய அரசும், உழவர் களின் உணர்வுப்பூர்வமான உறவைப் பேணி, அவர்களுக்கான பல திட்டங்களை தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டு வருகிறது.

**எங்களுடைய முயற்சிகளுக்கு அறிவியலாளர்கள் துணை நிற்பீர்!**

இப்போது கூட இந்த நிகழ்ச்சியை முடித் துவிட்டு, அடுத்ததாக, சென்னை வர்த்தக மையத்தில் நடைபெறக்கூடிய வேளாண் வணிகத் திருவிழா இரண்டு நாட்கள் நடை பெற இருக்கிறது அதைத் தொடங்கி வைப் பதற்கு இங்கிருந்து நான் நேரடியாக அங்கு செல்ல இருக்கிறேன்.

"மண்ணுயிர் காத்து மன்னுயிர் காக்கும் எங்களுடைய முயற்சிகளுக்கு அறிவியலா ளர்களும் துணை நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நிச்சயம் நீங்கள் எல் லாம் துணை நிற்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது!

நம் எல்லோருடைய நெஞ்சங்களிலும் நிறைந்து வாழக்கூடிய எம்.எஸ்.சுவாமி நாதன் அவர்களுடைய வழியில், சவுமியா சுவாமிநாதன் அவர்களும் சிறப்பாகப் பணி யாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

"ஒன்றிய அரசு இந்திய அளவில், 2070 க்குள் கார்பன் பயன்பாட்டைக் குறைக்க திட் டமிட்டு இருக்கக்கூடிய இந்த நிலையில், தமிழ்நாடு 2050ஆம் ஆண்டுக்குள்ளே அதை நிறைவேற்ற முயற்சி செய்கிறது என்று, நம்முடைய நல்ல முன்னெடுப்பு களுக்கு ஆதரவாகப் பேசி துணையாக இருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்!

**போரூர் பசுமைப் பூங்காவுக்கு எம்.எஸ்.சுவாமிநாதன் பெயர்!**

இந்தியாவின் எதிர்காலத்தை வடி வமைத்த ஆளுமைகளில் ஒருவரான எம். எஸ்.சுவாமிநாதன் அவர்களை பெருமைப்ப டுத்தும் வகையில், நம்முடைய திராவிட மாடல் அரசில், போரூர் ஈரநிலப் பசுமைப் பூங்காவுக்கு எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்க ளுடைய பெயரைச் சூட்டி திறந்து வைத்தி ருக்கிறோம்.

மேலும், தஞ்சாவூர் மாவட்டம் ஈச்சங் கோட்டையில் இருக்கின்ற வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், 'டாக் டர். எம்.எஸ். சுவாமிநாதன் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்' என்று அழைக்கப்படும் என்று அறிவித்தி ருக்கிறோம்.

அதேபோல, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கு டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் பெயரில், ஆண்டுதோறும் விருது வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறோம்.

**எம்.எஸ்.சுவாமிநாதனின் வாழ்வும் தொண்டும் நமக்கு வழிகாட்டும்!**

கடந்த ஆகஸ்ட் மாதம், டெல்லியில் நடை பெற்ற 'பாரத ரத்னா' எம். எஸ். சுவாமிநாதன் அவர்களின் நூற்றாண்டு நினைவு பன் னாட்டு மாநாட்டில், அமைச்சர் தங்கம் தென் னரசு அவர்கள் தமிழ்நாடு சார்பாகக் கலந்து கொண்டு, சுவாமிநாதன் அவர்கள் குறித்த புத்தகத்தையும் வெளியிட்டார்.

உழவர்களின் நலனைப் பாதுகாத்து, சிறப்பான எதிர்காலத்தையும் உருவாக்கு கின்ற நம்முடைய பணிகளுக்கு எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் வாழ்வும், தொண்டும் நமக்கு என்றென்றும் வழிகாட் டும்!

வாழ்க எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்க ளது புகழ் என்று கூறி, வேளாண்மையை யும், உழவர்களையும் எந்நாளும் பாதுகாப் போம்என்றுஉறுதிகூறி, விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.